# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 07/2021** **நாள்: 06.09.2021**

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் ஊரக உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் நடத்துவது குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று 06.09.2021 நடைபெற்றது.**

புதியதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களான காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி, மற்றும் தென்காசி மாவட்டங்களின் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களுக்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் தலைமையில் இன்று (06.09.2021) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பாரதீய ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், அனைத்திந்திய திரிணாமூல் காங்கிரஸ், பகுஜன் சமாஜ் கட்சி, தேசியவாத காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

உள்ளாட்சித் தேர்தல்களை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்திட தங்களது கருத்துகளை தெரிவிக்குமாறு ஆணையர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்கண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர்.

..2..

இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டு நடப்பில் உள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களில் உள்ள விவரங்களைக் கொண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும், கூட்டத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு, உச்சநீதிமன்றத்தில் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டவாறு விரைவில் தேர்தல் அறிவிக்கப்படும் என்றும், அதற்கான ஒத்துழைப்பினை அனைத்து அரசியல் கட்சிகளும் வழங்க வேண்டும் என்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் திரு பிரவீன்.பி.நாயர் இ.ஆ.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு க. அருண்மணி, முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி கு. தனலட்சுமி மற்றும் அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

6/9/2021

மக்கள் தொடர்பு அலுவலர்